INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS
DOI: 10.34256/irjt21213

# மொழி பற்றிய சிந்தனையில் அமைப்பியலுக்கும் பின் அமைப்பியலுக்கும் உள்ள வேறுபாடு

**இரா. ஸ்ரீவித்யா** [அ, *]

[அ] சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-14, இந்தியா

# The difference between Structuralism and Post Structuralism in the thinking of language

**R. Srividhya** [a, *]

[a] Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Pondicherry-14, India

* Corresponding Author:
srividhyanet@gmail.com

Received : 13-01-2021
Revised : 02-04-2021
Accepted : 18-04-2021
Published : 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Structuralism and Post Structuralism are two different literary movements. Structuralism believes that the world should be understood through structures. According to structuralism, there is no reality outside the language. In language the individual words attained their meaning due to the existence of the structure. Post-structuralism rejected this basic idea of Saussure. It says, there is no reality or absolute truth. There is no fixed connection between the signifier and signified. Meaning is always deferred. This article presents the difference between the structuralism and Post structuralism in the concept of language.

**Keywords:** Structuralism, Post Structuralism, Signifier, Signified

## முன்னுரை

அமைப்பியல்வாதம் ஃபெர்டினன்ட் டி சசூரின் கருத்தாக்கங்களில் இருந்து தனக்கான கொள்கைகளை வரையறை செய்து கொண்டது. சசூர் தனது ('A Course in General Linguistics. 1916) என்ற நூலில் மொழியை வரலாற்று ரீதியாக ஆய்வதை விடுத்து, சமகால மொழியை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தினார். அமைப்பியல் கொள்கையை இலக்கியம் மட்டுமின்றி, தொன்மம், விளையாட்டுப் பொம்மைகள், விளம்பரங்கள், குத்துச்சண்டை போட்டி என எதிலும் பொருத்திப் பார்க்க முடிகிறது. ஆனால் அதற்கு அடிப்படையாக அமைவது சசூரின் மொழியியல் சிந்தனைகளேயாகும். சசூரின் மொழி குறித்த கருத்தாக்கத்தின் அடிப்படையை தெரிதா மறுதலிக்கிறார். மொழி குறித்த சிந்தனையில் அமைப்பியல் மற்றும் பின்அமைப்பியலுக்குள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும் முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

## சசூரின் மொழி பற்றிய அமைப்பியல் பார்வை

குறிப்பான், குறிப்பீடு என்கிற இரண்டும் சேர்ந்து குறியை உருவாக்குகின்றன என்கிறார் சசூர்.

குறி = குறிப்பான் / குறிப்பீடு

இதனை சொல் = சொல் / பொருள் (அ)

சொன்மை / பொருண்மை என்று எடுத்துக் காட்டலாம். தாமரை என்ற சொல்லில் தா, ம, ரை என்கிற ஒலிகள் இணைந்த ஓசையும், அவ்வோசையை இணைத்த மாத்திரத்தில் கேட்பவரின் மனதில் தோன்றும் படிமமும் சேர்ந்தே சொல்லை உருவாக்குகின்றன என்கிறார் சசூர். சசூரின் மொழியியல் சிந்தனைகளில் மூன்று அடிப்படைக் கருத்தாக்கங்கள் இடம்பெறுகின்றன.

## மொழியின் இடுகுறித்தன்மை (Arbitrary)

சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே உள்ள உறவு காரண - காரிய உறவன்று. அவை இடுகுறித்தன்மை வாய்ந்தவை என்கிறார் சசூர். தாமரை என்ற சொல்லிற்கும் தாமரை என்ற பொருளிற்கும் எந்தக் காரண - காரிய உறவும் இல்லை. அதனால்தான் அதனை ஆங்கிலத்தில் 'லோட்டஸ்' (lotus) என்றும் இந்தியில் 'கமல்' என்றும் அழைக்கின்றனர். சொல்லுக்குள் பொருள் உறைந்திருக்கவில்லை. பொருள் வெளியே கட்டமைக்கப்படுகிறது என்கிற பார்வை எல்லாத் துறைகளுக்கும் ஒரு புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தியது. மொழி யதார்த்தத்தை, உலகைப் பிரதிபலிக்கவில்லை. யதார்த்தத்தை, உலகை, உண்மையைக் கட்டமைக்கிறது என்கிற அமைப்பியல் சிந்தனை மிகவும் குறிப்பிடத்தக்கது. (அதனால்தான், ஆண் வலிமையானவன் - பெண் மென்மையானவள், ஆண் அறிவு வாய்ந்தவன் - பெண் உணர்ச்சி வசப்பட்டவள், பிரஜாபதியின் முகத்திலிருந்து தோன்றியவன் பிராமணன். அதனால் அவன் மேலானவன் - பிரஜாபதியின் பாதத்திலிருந்து தோன்றியவன் சூத்திரன். அதனால் அவன் கீழானவன் என்கிற கற்பிதங்கள் எல்லாம் கட்டமைக்கப்பட்ட மொழிச்சிந்தனைகள் என்கிற புரிதல் உருவானது) மனிதன் மொழியைப் படைக்கிறான் என்கிற பழைய கருத்து தகர்ந்து, மொழிதான் மனிதனை வடிவமைக்கிறது என்கிற புதிய சிந்தனை உருவானது. இதுவரை மனிதர்கள் உண்மை என நம்பிய அனைத்தும், உண்மையைப் போல மொழியால் கட்டமைக்கப்பட்டவையாகும்.

## மொழியின் சார்புத்தன்மை (Relative)

இணை உறவு, முரண் உறவு என்கிற இரண்டின் வாயிலாகத்தான் மொழி இயங்குகிறது என்கிற சசூரின் பார்வை மொழியின் சார்புத்தன்மையை வெளிக்கொணர்ந்தது. எந்த ஒரு சொல்லும் மொழியில் தனித்து இயங்கவில்லை. இன்னொரு சொல்லைச் சார்ந்தே இயங்குகின்றன என்கிறார் சசூர். 'ஆண்' என்கிற சொல்லுக்கான பொருள் 'பெண்ணிலிருந்து வேறுபட்டவன்' என்பதில் உருவாகிறது. 'பெண்' என்ற சொல்லுக்கான பொருள் 'ஆணிலிருந்து வேறுபட்டவள்' என்பதில் உருவாகிறது. இருள் என்றால், 'அது வெளிச்சம் அல்ல' என்பதிலும், பகல் என்றால், 'அது இருள் - இரவு அல்ல' என்பதிலிருந்தும் பொருள் உருவாகிறது. சொல்லுக்கான பொருள் இந்த வேறுபாட்டு உறவில் (difference) அமைந்திருக்கிறது. இதனை இணை முரண் (Binary opposition) எனலாம். சொல்லுக்கான பொருள் இந்த இணைமுரணில் இருந்து பெறப்படுகிறது. (அதனால்தான் அமைப்பியல் திறனாய்வாளர்கள், இலக்கியப் படைப்பில் மையமாக விளங்கும் இணைமுரணை ஆராய முற்படுகின்றனர்.)

உண்மை x பொய், பத்தினி x பரத்தை, மனிதன் x விலங்கு, நாத்திகம் x ஆத்திகம் முதலியவை இலக்கியப் படைப்புகளில் வெளிப்படும் இணைமுரண்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

## அமைப்பொழுங்கு (Systematic)

மொழி ஒரு குறிப்பிட்ட அமைப்பொழுங்கின்படி இயங்குகின்றன என்கிற சசூரின் சிந்தனையும் இலக்கிய ஆய்வில் குறிப்பிடத்தகுந்தாகும். செஸ் விளையாட்டில் கறுப்பு, வெள்ளையிலான பலகை, இரு பக்கத்திலும் உள்ள காய்கள் நமது கண்ணுக்குப் புலனாகின்றன. ஆனால் அந்த ஆட்டத்தின் விதிகள் அருவமாய் மூளையில் மறைந்துள்ளன. சிப்பாய் எவ்வாறு நகர வேண்டும்? குதிரை எவ்வாறு நகர வேண்டும்? யானை எவ்வாறு நகர வேண்டும்? ராஜா எவ்வாறு காப்பாற்றப்பட வேண்டும் என்கிற விதிகள் விளையாடுபவரின் மூளையில் அருவமாய் உள்ளனவே ஒழிய, அவை பலகை போல், காய்களைப் போல் வெளிப்படையாகத் தெரிவதில்லை. செஸ் மட்டுமல்ல. கிரிக்கெட் உட்பட எல்லா

விளையாட்டுகளிலும் ஆட்டத்தின் விதிகள் அருவமாய் மறைந்தே காணப்படுகின்றன. விளையாடுபவரின் மூளையிலும் பார்ப்பவரின் அகத்திலும் உறைந்துள்ளன. மொழியும் அவ்வாறே. அதன் விதிகள் கண்ணுக்குத் தெரிவதில்லை. மறைமுகமாக அந்த விதிகள் மொழியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனை சசூர் புறநிலை (parole), புதைநிலை (langue} என வகை பிரிக்கிறார். ஒவ்வொரு தனிநபரின் பேச்சும், மொழியின் வெளிப்படையான வடிவங்கள் ஆகும். எல்லாத் தனிநபர்களின் பேச்சுக்குப் பின்னால், சாராம்சமாய் இயங்கக்கூடிய விதிகள் புதைநிலையில் மறைந்துள்ளன. (தமிழவன் இதனைப் பேச்சு (parole). மொழிக்கிடங்கு (langue) என மொழியாக்கம் செய்கிறார் (Tamilavan, 2008).

உதாரணமாக, 1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். 2. இராமன் இராவணனைத் தோற்கடித்தான். 3. கோவலன் கண்ணகியை மறந்தான். இப்படி ஆயிரக்கணக்கான சொற்றொடர்களை உருவாக்கிக்கொண்டே செல்லலாம். ஆனால் இந்தச் சொற்றொடர்கள் அனைத்திற்கும் பின்னால், எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை (Subject + Object + Verb = SOV) என்கிற விதி அருவமாய்ப் புதைந்துள்ளது. இந்த விதிதான் (SOV) ஏராளமான தொடர்களை உருவாக்குகிறது. இப்படி ஒரு பிரதிக்குப் பின்னால் உறைந்திருக்கும் விதிகள், ஒரு இலக்கிய வகைமைக்குப் பின்னால் (அகம் / புறம், காப்பியம், பக்தி இலக்கியம்) இயங்கும் விதிகள். ஒரு பண்பாட்டின் அடியில் உறைந்திருக்கும் சிந்தனை அமைப்புகள் எனக் கட்டிடத்தின் கீழே இருக்கும் அஸ்திவாரத்தைத் தேட ஆரம்பிக்கிறது அமைப்பியல் திறனாய்வு.

சசூரின் மேற்சொன்ன மொழியியல் சிந்தனைகள் அமைப்பியல் திறனாய்வுக்குச் சில ஆய்வு வழிமுறைகளை நல்கியுள்ளது. அவை வருமாறு:

1. இலக்கியம் பண்பாட்டின் ஒரு கலைப்பொருள். இலக்கியம் அடிப்படையில் மொழியால் ஆன கலை. இலக்கியம் மூலமாக மொழி உண்மைகளை வடிவமைக்கிறது. அப்படி வடிவமைக்கப்பட்ட உண்மைகளை, கற்பிதங்களை வெளிக்கொணர்தல்.

2. மொழி எவ்வாறு ஓர் அமைப்பின்கீழ் இயங்குகிறதோ, அப்படி ஓர் இலக்கியப் படைப்பு எத்தகைய அமைப்பின்கீழ் இயங்குகிறது என்பதைக் கண்டறிதல்.

3. இலக்கியப் படைப்பு ஓர் அமைப்பாக இயங்குகிற அதே வேளையில், அந்த அமைப்பு தொன்மம், தகவல் தொடர்பு ஊடகம், கல்வி நிறுவனம் முதலிய பிற அமைப்புகளுடன் இணைந்து ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் வெளிப்பாடாக எப்படிச் செயல்படுகிறது என்பதை ஆராய்தல்.

4. எவ்வாறு ஓர் இலக்கியப் படைப்பு பொருளை உற்பத்தி செய்கிறது என்பதை ஆராய்தல். என்கிற முறையியலின்கீழ் அமைப்பியல் திறனாய்வு செயல்படுகிறது.

சசூரின் அக வடிவம், புற வடிவம் என்னும் அமைப்பியல்வாத மொழிக்கோட்பாட்டைப் (Structural Linguistics) பயன்படுத்தித் தனி மனிதப் படைப்புகளுக்குப் பின்னால் செயல்படும் அக வடிவத்தை அமைப்பியல் சிந்தனையாளர்கள் காண முயல்கின்றனர். மொழியின் பல்வேறு தொழிற்படு வழக்குகளுக்கு அடிப்படையான இலக்கண வடிவத்தை மொழியியலாளர் கண்டறிந்தது போல, அமைப்பியல்வாதிகளும் இலக்கியத்திற்குரிய இலக்கண வடிவைக் (Grammar of Literature) காணும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதன்படி ஒவ்வொரு இலக்கிய வகைமைக்கும் அடிப்படையான ஓர் இலக்கண வடிவம் உண்டு என்றும், அத்தகைய இலக்கணப் பொது வடிவத்தின் தனிப் பரிமாணங்களே தனி மனிதப் படைப்புகள் என்றும் கண்டறிகின்றனர். இத்தகைய அக வடிவத்தைக் கவிதையியல் (Poetics) என்றும், இதுவே பின்னர் அமைப்பியல்வாதக் கவிதையியல் (Structuralist Poetics) என்றும் வழங்கப்படுகிறது (Lawrans & Bagavathi, 1998).

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தாமணி என்பன பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு தனி மனிதர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள். இவற்றைத் தனித்தனியே ஆராய்ந்து அவற்றின் இலக்கியச் சிறப்புகளை விளக்குவது ஒரு வகை ஆய்வு. இத்தனிப்படைப்புகள் உருவாவதற்குரிய கொள்கைச் சட்டகம் எது என்று ஆராய்ந்து கண்டு, அத்தகைய அடிப்படைச் சட்டகத்திற்கும் ஒவ்வொரு தனிமனிதப் படைப்புக்கும் உள்ள தொடர்புகளை ஒப்பிட்டும்

உறழ்ந்தும் ஆராய்தல் மற்றொரு வகை. இங்கே சட்டகம் என்பது மேலே குறிப்பிட்ட எல்லா நூல்களுக்கும் பொதுவானவையாகக் காணப்படும் வடிவக்கூறுகள், பாடுபொருட் கூறுகள், இலக்கிய வெளிப்பாட்டு உத்திகள் என்பவற்றின் தொகுப்பமைப்பைக் குறிக்கிறது. இத்தொகுப்பு அமைப்பு அருவமானது. தனி இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படை இலக்கணமாக அமைவது. இத்தகைய கொள்கைச் சட்டகத்தை அமைப்பியல்வாதிகள் 'கவிதையியல்' எனக் குறிப்பிடுகின்றனர்.

கவிதையியல் என்பது தனிப்பட்ட பாடல் அல்லது நூல்களுக்குச் சொற்பொருளோ, இலக்கிய நயமோ, விளக்கமோ தரும் உரை வகைகளுள் ஒன்றன்று. பாடல்கள் எந்தெந்த சூழல்களில் தோன்றுகின்றன, என்னென்ன வகைகளில் பொருள் தரும் இயல்பின, ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையைச் சார்ந்த திணை, துறைகளைச் சார்ந்த பாடல் அல்லது நூல் எவ்வாறெல்லாம் பொருள் கொள்ள இடமளிக்கும், பல்வேறு சூழல்களில் பல்வேறு பொருள் தருவதாக எவ்வாறு ஒரு பாடல் இயற்றப்படலாம் என்றெல்லாம் விளக்கக்கூடியதாக இந்தக் கவிதையியல் அமைகிறது. எனவே அமைப்பியலாளர்களின் கவிதையியல் என்பது ஒரு பொருண்மையியல் நூலன்று. மாறாக, ஓர் இலக்கியப் படைப்பு பொருள் தரும் சூழல்களையும், பல்வேறு வகையாகப் பொருள் கொள்ள இடந்தரும் படைப்பு உத்திகளையும் உள்ளடக்கி நிற்கும் ஓர் இலக்கண அமைப்பாகும். திணை, துறை, கூற்று என்னும் படைப்புச் சூழலுக்கேற்பப் பல்வேறு பொருள் தரும் என்று கூறினாலும், ஒரு வாசகன் வலிந்துகொள்ளும் பொருள்களையெல்லாம் தருவதற்குக் கவிதையியல் இடமளிக்காது. படைப்பு வரம்புக்குட்பட்ட பொருள் தரும் பல சூழல்களை மட்டுமே கவிதையியல் முன்நிறுத்துகிறது. இங்கே பொருள் என்று குறிப்பிடுவது எல்லாம் ஒரு பாடலின் சொற்பொருளையோ, திரண்ட கருத்தையோ குறிப்பிடுவது அன்று. தமிழ் மரபில் கூறினால் திணைப்பொருளையும் துறைப்பொருளையுமே அமைப்பியல்வாதிகள் பொருள் என்று கூறுகின்றனர். வாய்பாட்டுப் பொருளாக உள்ள இப்பொருளை 'வாய்பாட்டுப் பொருண்மை' 'empty meaning' என்னும் கருத்தில் என்னும் தொடரால் குறிக்கின்றனர் (Lawrans & Bagavathi, 1998).

## மொழி பற்றிய பின் அமைப்பியல் சிந்தனைகள்

அமைப்பியலின் நீட்சியாகவும் அதே சமயத்தில் அமைப்பியலின் எதிர்வினையாகவும் பின் அமைப்பியல் திகழ்கிறது. ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் ழாக் தெரிதா 'மனித அறிவியலின் சொல்லாடலில் அமைப்பு, குறி மற்றும் விளையாட்டு' (Structure, Sign and Play in the Discourse of the Human Science) என்ற தலைப்பில் கட்டுரை வாசித்த காலத்திலிருந்து அமைப்பியலின் செல்வாக்கு கசியத் தொடங்கி, பின் அமைப்பியல் தோற்றம் பெறத் துவங்கியது.

பின் அமைப்பியலின் முன்னோடிகளாக, தெரிதா, லக்கான், ஃபூக்கோ, ழூலியா கிறிஸ்தெவா ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் லக்கானும் கிறிஸ்தெவாவும் உளப்பகுப்பாய்வுப் பின்புலத்தைச் சார்ந்தவர்கள். தெரிதா தத்துவத்துறையையும் ஃபூக்கோ வரலாற்றுத் துறையையும் சார்ந்தவர்கள். இவர்கள் இலக்கியம் மற்றும் இலக்கியத் திறனாய்வுப் பின்புலம் இல்லாதவர்களாக இருப்பினும், இவர்களுடைய கருத்தாக்கங்கள் இணைந்து பின் அமைப்பியல் திறனாய்வாக உருப்பெற்றது. இவர்கள் வேறு வேறு துறைகளைச் சார்ந்தவர்களாக இருப்பினும் மொழி மற்றும் அதன் பொருள் குறித்த கருத்தாக்கங்களில் இவர்களிடையே ஒற்றுமை காணப்படுகிறது.

தெரிதாவின் மொழி குறித்த கருத்தாக்கங்கள் சிதைவாக்கத் திறனாய்வாக (Deconstruction) உருப்பெற்றது. சிதைவாக்கத் திறனாய்வு என்பது ஒரு வகையான வாசிப்பு முறையாகும். ஒரு பிரதியை (இலக்கியமோ (அ) வேறு ஏதேனும் பண்பாட்டுச் செயல்பாடாகவோ இருக்கலாம்.) எவ்வாறு வாசிப்பது? எவ்வாறு பொருட்கோடல் செய்வது என்பதைப் பற்றியதாகும்.

பிரதி மீதான ஒவ்வொரு வாசிப்பும் ஒரு வகையான பொருட்கோடலாகும். இந்தப் பொருள் கொள்ளும் முறையில்தான் அமைப்பியலில் இருந்து பின் அமைப்பியல் வேறுபடுகிறது. அமைப்பியல் திறனாய்வு சசூரின் அமைப்பியல் மொழியியலை அடிப்படையாகக் கொண்டது. சசூரின் கருத்து, குறிப்பானும் குறிப்பீடும் இணைந்து குறியை உருவாக்குகின்றன என்பதாகும். குறிப்பான் ஒலி சார்ந்தது. (ம, ல, ர் - உ, ல, க, ம்) கண்ணுக்குப் புலப்படக்கூடியது. குறிப்பீடு அச்சொல்லைக் கேட்டவுடன் (அ)

படித்தவுடன் மனதில் உருவாகும் கருத்துருவம் சார்ந்தது. அது கண்ணுக்குப் புலப்படாதது. கண்ணுக்குத் தெரிந்த சொல் வடிவமும், கண்ணுக்குத் தெரியாத மூளையில் எழுகின்ற பிம்ப வடிவமும் சேர்ந்துதான் ஒரு சொல்லுக்கான பொருளை உருவாக்குகின்றன. ஏன் அந்தக் குறிப்பிட்ட சொல், அந்தக் குறிப்பிட்ட பொருளைக் குறிக்கிறது என்பதற்குக் காரணம் கிடையாது. அது இடுகுறித்தன்மை வாய்ந்ததாகும். பின் அமைப்பியல் சசூரின் இந்தச் சிந்தனைகளை மறுதலிக்கிறது.

சசூர், மொழியில் வேறுபாட்டு உறவுதான் பொருளைக் கட்டமைக்கிறது என்கிறார். உண்மையின் பொருள், அது பொய் அல்ல என்பதிலிருந்து உருவாகிறது என்கிறார். ஆனால் அந்த வேறுபாட்டு உறவை மேலும் விளக்காமல், மொழியின் நிலைத்த பொருளில் நம்பிக்கை வைக்கத் துவங்குகிறார். மொழி அமைப்பால் அந்தப் பொருளை உருவாக்கம் செய்ய முடியும் என நம்புகிறார். ஆனால் பின்அமைப்பியல் நிலைத்த பொருள் - மாறாத பொருள் என்பதே மொழியில் சாத்தியமில்லை என்கிறது. காரணம் 'பூனை' என்கிற குறிப்பானின் (signifier) பொருள் அது எலி அல்ல, நாய் அல்ல, நரி அல்ல என்கிற பல்வேறு வேறுபாட்டுச் சங்கிலிகளின் அடிப்படையில் பொருள் உண்டாகிறது. இந்த வேறுபாட்டிற்கு முடிவு என்பதே கிடையாது. அது மட்டுமின்றி பூனைக்கான பொருள், எலி, நாய், நரி இவைகளில் என்ன இருக்கிறதோ, அதிலிருந்து வேறுபட்ட தன்மையில் இருந்து பூனைக்கான பொருள் உண்டாகிறது என்கிறது அமைப்பியல். ஆனால் பின் அமைப்பியலோ ஒரு குறிப்பான், எல்லையற்ற குறிப்பான்களின் (நாய், நரி, எலி) சங்கமத்தோடு இணையும்போது பொருள் உருவாவதில்லை. ஒத்திப்போடப்பட்டுக்கொண்டே (deferral) செல்கிறது என்று கூறுகிறது. மொழியில் வேறுபாட்டு உறவும் ஒத்திப் போடப்படுகின்ற செயல்பாடும் நிகழ்வதால் நிலைத்த பொருள் என்று ஒன்றை உருவாக்கவே முடியாது என்கிறது பின் அமைப்பியல். (Pattanayak, 2009)

"புரிதலின் வலைதனை நீ விரித்தகல வீசிடினும்

நிச்சயம் சிக்காது என்றன் பேச்சுப்பொருள் என்னும் புள்"

- என்ற காலிபின் ஈரடிச் செய்யுளைச் சுட்டிக் காட்டுகிறார் கோபிசந்த் நாரங்க். (Narang, 2005) இக்கவிதை, மொழியின் பொருள் காண முடியாத ஆழத்தை அழகாகச் சுட்டிக்காட்டுகிறது.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒரு மையம் (center) செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. வீரயுகக் காலத்தில், அரசன் மையமாக விளங்குகிறான். பக்தி இலக்கியக் காலக்கட்டத்தில் இறைவன் மையமாக விளங்குகிறான். காலனித்துவக் காலக்கட்டத்தில் ஐரோப்பா மையமாக விளங்குகிறது. ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண் மையமானவனாக இருக்கிறான். இந்த மையத்தைக் கட்டமைப்பது மொழி. அமைப்பியலோ இந்த மொழியின் மையத்தை ஆராய முற்படுகிறது. மொழி குறிப்பிட்ட விதிகளின் கீழ் இயங்குகிறது. அந்த விதிகளின் வழியாகத்தான் பொருள் உருவாகிறதே ஒழிய, ஆசிரியரிடம் இருந்து பொருள் பிறப்பதில்லை என்கிறது அமைப்பியல். அதனால்தான் 'ஆசிரியர் இறந்து விட்டார்' என்கிறார் ரோலண்ட் பார்த். (இவர் தொடக்கத்தில் அமைப்பியலுக்கும் பின்னர் பின் அமைப்பியலுக்கும் வித்திட்டவர்.) குறிப்பிட்ட விதிகள் மொழியை இயக்குகின்றன அல்லது கட்டுப்படுத்துகின்றன அல்லது பொருளை உருவாக்குகின்றன என்கிற அமைப்பியல் சிந்தனைக்கு மாறாக, 'மையம்' என்பதே ஒன்றில்லை என எல்லா மையங்களையும் (மொழி கடவுள் ஆண்) தகர்க்கிறது (அ) சிதைக்கிறது பின் அமைப்பியல் திறனாய்வு.

மொழி ஒரு குறிப்பிட்ட மையத்தின் அடிப்படையிலோ (அ) விதிகளின் அடிப்படையிலோ இயங்கவில்லை என்கிறது பின் அமைப்பியலோ மொழியில் பொருள் நிலைத்ததாக இல்லாதபொழுது மொழியில் உருவாக்கப்படுகிற அனைத்தும் (கடவுள் அரசன் ஆண்...) நிலையற்ற தன்மையிலேயே இயங்குகின்றன என்கிறது பின் அமைப்பியல். உரிக்க, உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயம் போன்றது மொழி என்கிற தெளிவைத் தருகிறது பின் அமைப்பியல். மொழி வேறுபாடுகளின் விளையாட்டு என்கிறது. பார்த்தின் 'ஆசிரியர் இறந்துவிட்டார்' (Death of Author) என்ற கட்டுரையும் ஃபூக்கோவின் 'ஆசிரியர் என்பவர் யார்?' (What is an Author?) என்ற கட்டுரையும் மொழியின் பொருட்கோடலில் ஆசிரியருக்கு எந்தப் பங்கும் இல்லை என்பதைத் தெளிவாக்கின. ஆசிரியருக்குக் கொடுத்த முக்கியத்துவம் இப்பொழுது வாசகருக்கு அளிக்கப்படுகிறது. பிரதிக்கு உயிர் கொடுப்பவன் ஆசிரியன் அல்ல. வாசகனே என்கிற புரிதலுக்கு இத்திறனாய்வுகள் இட்டுச் செல்கின்றன. வாசகனின்

முக்கியத்துவத்தை அமைப்பியல் திறனாய்வாளரான ஜோனதன் கல்லர் குறிப்பிட்டிருந்தாலும் பின் அமைப்பியல் வாசகனை விட (மனிதன்) வாசிப்பு முறைக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. வாசிப்பு என்பது குறிபபான்களால் மொழி நிகழ்த்தும் விளையாட்டு. அது பன்மைத்தன்மை வாய்ந்தது. ஒரு பிரதியின்மேல் பல்வகையான வாசிப்புகளை நிகழ்த்த முடியும் என்கிறது பின் அமைப்பியல்.

'தையல் சொல் கேளேல்' - பெண்களின் பேச்சைக் கேட்காதே என்றும் 'தையல் சொல் கேள். ஏல்.' - பெண்கள் பேச்சைக் கேட்டு அதன்வழி நடப்பாயாக' என்று அதற்கு முற்றிலும் மாறான பொருளையும் ஒரு வரி ஆத்திசூடிக்கு அளிக்க முடியுமெனில், பல்வேறு வரிகளில் அமைந்த பிரதிகளின் பொருட்கோடல் முடிவற்றதாய் நீண்டுகொண்டே செல்வதைப் பின் அமைப்பியல் வழி உணர முடிகிறது.

## முடிவுரை

இலக்கியத்தின் புரிதலிலும் பொருட்கோடலிலும் நவீன திறனாய்வுகள் பல உள்ளொளிகளை அளித்து வருகின்றன. இலக்கியத்தை ஆய்வதற்கு மட்டுமல்ல, புத்திலக்கியங்களின் படைப்பாக்கத்திற்கும் அமைப்பியல் மற்றும் பின்அமைப்பியல் திறனாய்வுகள் பல்வேறு வெளிச்சங்களை நல்குகின்றன. மரபார்ந்த இலக்கியத் திறனாய்வுகள் பிரதிக்குப் பின்னாலும் பிரதியை இயற்றிய ஆசிரியருக்குப் பின்னாலும் ஒளிவட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய அமைப்பியல் திறனாய்வோ பிரதி மொழியால் ஆனது எனக்கூறி, அந்த மொழிக்குப் பின்னால் உள்ள வெளிச்சத்தைக் காட்டுகிறது. அதை மறுதலித்து எழுந்த பின் அமைப்பியலோ வெளிச்சத்தை மட்டுமல்ல, மொழிக்குப் பின்னால் உள்ள இருளையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. அவ்வகையில். மொழி குறித்த சிந்தனையில் அமைப்பியல் மற்றும் பின்அமைப்பியலுக்கு உள்ள அடிப்படை வேறுபாட்டை இக்கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது.

## References


Lawrans, C.J., Bagavathi, K. (1998) Tholkappiya Ilakkiya Kotpadukal, International Institute of Tamil Studies, Chennai, India.

Narang, G.C. (2005) Amaipuvathamum Pinamaipiyal Matrum Keelaikaviya Eyal, Sahitya Akademi, New Delhi, India

Pattanayak, B.K. (2009) Dynamics of Twentieth Century Literary Criticism, Atlantic Publishers & Distributors, New Delhi, India.

Tamilavan, (2008) Amaippiyalum Athan Piragum, Adayalam Publication, Trichy, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License